www.Padasalai.Net www.TrbTnpsc.com

V11Zoo

விருதுநகர் மாவட்டம்

அரையாண்டுப் பொதுத் தேர்வு - டிசம்பர் 2023

வகுப்பு 11

நேரம்: 3.00 மணி **விலங்கியல்** மொத்த மதிப்பெண்கள்: 70

பகுதி - I

15×1=15

குறிப்பு: 1. அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.
2. கொடுக்கப்பட்டுள்ள மாற்று விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்.

1) கிளாடோகிராம் என்பது கீழ்கண்ட பண்புகளைக் கொண்டுள்ளது?
அ) உடற்செயலியல் மற்றும் உயிர்வேதியியல் பண்புகள்
ஆ) பரிணாமப் பண்புகள் மற்றும் மரபுவழிப் பண்புகள்
இ) பல்லுயிர்த்தன்மை மற்றும் இனத்தொடர்பு தொகுப்பமைவு
ஈ) மேற்குறிப்பிட்ட ஏதுமில்லை

2) கால்களற்ற இருவாழ்வி ............
அ) ஹைலா ஆ) இத்தியோஃபிஸ் இ) ரானா ஈ) சலமாண்டர்

3) கீழ்வருவனவற்றுள் தவறான கூற்றைத் தேர்வு செய்யவும்.
அ) மண்புழுவில் ஒரு இணை ஆண் இனத்துளை உள்ளது.
ஆ) மண்புழுவின் இடப்பெயர்ச்சிக்கு நுண்முட்கள் பயன்படுகிறது.
இ) மண்புழுவின் உடற்சுவரில் வட்டத்தசைகள் மற்றும் நீள்தசைகள் உள்ளன.
ஈ) டிப்லோசால் எனப்படுவது மண்புழு குடலின் ஒரு பகுதியாகும்.

4) கீழ்கண்டவற்றைப் பொருத்தி சரியான விடையைத் தேர்ந்தெடுக்க.
P) லிபேஸ் - i) ஸ்டார்ச்
Q) பெப்சின் - ii) காசின்
R) ரென்னின் - iii) புரதம்
S) டயலின் - iv) லிபிட்
அ) P-iv, Q-ii, R-i, S-iii ஆ) P-iii, Q-iv, R-ii, S-i
இ) P-iv, Q-iii, R-ii, S-i ஈ) P-iii, Q-ii, R-iv, S-i

5) காதிலுள்ள எப்பகுதி அழுத்த அலைகளைச் செயல்நிலை மின்னழுத்தமாக மாற்றுகிறது?
அ) செவிப்பறை சவ்வு ஆ) கார்டை உறுப்பு
இ) நீள்வட்டப் பலகணி ஈ) அரைவட்டக் குழல்கள்

6) பெரியவர்களின் முதுகெலும்புத் தொடரில் உள்ள எலும்புகளின் மொத்த எண்ணிக்கை
அ) 24 ஆ) 26 இ) 33 ஈ) 29

7) நரம்பு தூண்டல் கடத்தலின்போது நரம்பு சந்திப்பில் சைனாப்டிக் பைகளிலிருந்து நரம்புணர்வு கடத்திகள் (P) அயனிகளின் (Q) செயல்பாடுகளால் வெளியிடப்படுகின்றன. சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்.
அ) P = GABA, Q = $Na^+$ ஆ) P = கோலைன் எஸ்ட்ரேஸ், Q = $Ca^{++}$
இ) P = அசிட்டைல் கோலைன், Q = $Ca^{++}$ ஈ) P = அசிட்டைல் கோலைன், Q = $Na^+$

8) **கூற்று** : ஒரு மனிதன் கடல்மட்டத்தில் இருந்து உயரமான இடத்திற்கு செல்லும்போது ஆக்ஸிஜன் பகுதி அழுத்த குறைவால், தலைவலி, தலைசுற்றல், குறை சுவாசம் போன்ற அறிகுறிகள் தோன்றுகின்றன.
**காரணம்** : ஆக்ஸிஜன் ஹீமோகுளோபினோடு அதிகம் இணைவதே இதற்கு காரணம்.
அ) கூற்று சரி, காரணம் தவறு. ஆ) கூற்றும் காரணமும் சரி.
இ) கூற்றும், காரணமும் தவறு. ஈ) கூற்று தவறு, காரணம் சரி.

9) கீழ்கொடுக்கப்பட்டுள்ள பணிகளில் எந்தப் பணி இரத்தச் சிவப்பணுக்களால் மேற்கொள்ள இயலும்?
அ) புரத உற்பத்தி ஆ) செல் பிரிதல்
இ) லிப்பிட் உற்பத்தி ஈ) செயல்மிகு கடத்தல்

10) சேய்மை சுருள் நுண்குழல் மற்றும் சேகரிப்பு நாளங்களில் ஆல்டோஸ்டீரோன் செயல்படும்போது நீர் இதன் மூலம் உறிஞ்சப்படுகிறது.
அ) ஸ்பெக்ட்ரின்கள் ஆ) அக்குவாபோரின்கள்
இ) குளுக்கோஸ் கடத்திகள் ஈ) குளோரைடு கால்வாய்

11) கீழே கொடுக்கப்பட்டுள்ள விடைகளில் தைராய்டு சுரப்பி குறித்த வாக்கியங்களில் எது தவறானது எனக் கண்டுபிடி.
i) இது RBC உருவாக்க நிகழ்வுகளைத் தடைசெய்கிறது.

Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com

V11Zoo

ii) இது நீர் மற்றும் மின்பகுதிகளின் பராமரிப்புக்கு உதவுகின்றது.
iii) இதன் அதிக சுரப்பு இரத்த அழுத்தத்தினை குறைக்கலாம்.
iv) இது எலும்பு உருவாக்கச் செல்களைத் தூண்டுகிறது.
அ) (i) மற்றும் (ii) ஆ) (ii) மற்றும் (iv) இ) (i) மற்றும் (iv) ஈ) (i) மற்றும் (iii)

12) சிவப்பணுக்களை நீக்கச் செய்யும் திரவம்
அ) டார்க்ஸ் திரவம் ஆ) டாய்ஸான் திரவம்
இ) ஹேயம்ஸ் திரவம் ஈ) ஃபீனால் திரவம்

13) தசைநாரிலுள்ள ஆக்ஸிஜனைச் சேமிக்கும் நிறமி
அ) மையோகுளோபின் ஆ) ட்ரோபோனின்
இ) மையோசின் ஈ) ஆக்டின்

14) தேனீ வளர்ப்பு இவ்வாறு அழைக்கப்படுகின்றது.
அ) செரிகல்சர் ஆ) லேக் கல்சர் இ) வெர்மிகல்சர் ஈ) ஏபிகல்சர்

15) சரியான பொருத்தப்பட்டுள்ள இணையை தேர்வு செய்க.
அ) முட்டையிடுபவை - பிரம்மா
ஆ) கறிக்கோழி வகை - லெக்ஹார்ன்
இ) இருவகை இனம் - வெள்ளை பிளிமத் ராக்
ஈ) அலங்கார வகை - சில்க்கி

## பகுதி - II

**குறிப்பு: எவையேனும் ஆறு வினாக்களுக்கு விடையளி. வினா எண் 24க்கு கட்டாயமாக விடையளி.** 6×2=12

16) கோவேறு கழுதை ஏன் மலட்டுத்தன்மை உடையதாக உள்ளது?
17) சைசோகீலோமேட் மற்றும் எண்டிரோகீலோமேட் ஒப்பிடுக.
18) தவளை இரத்தத்தில் உள்ள பகுதிப்பொருட்கள் யாவை?
19) நிமோனியா ஏன் ஒரு ஆபத்தான நோயாகக் கருதப்படுகிறது?
20) எலும்புத் தசைகளை விளக்கும்போது வரியுடைய என்பது எதைக் குறிக்கிறது?
21) கண்தக அமைதல் என்றால் என்ன?
22) உடல்சமநிலைப் பேணுதல் பற்றி எழுதுக.
23) மண்புழு செறிவூட்டப்பட்ட நீர் என்பது என்ன? அதன் பயன்களைக் கூறுக.
24) மனித சிறுநீரகத்தின் நீள்வெட்டுத் தோற்றத்தினை படம் வரைந்து பாகங்களை குறிக்கவும்.

## பகுதி - III

**குறிப்பு: எவையேனும் ஆறு வினாக்களுக்கு விடையளி. வினா எண் 33க்கு கட்டாயமாக விடையளி.** 6×3=18

25) மூடியவகை, திறந்தவகை சுற்றோட்ட மண்டலத்தை வேறுபடுத்துக.
26) சிலவகை எபிதீலியங்கள் பொய்யடுக்கினால் ஆனவை. இதன் பொருள் என்ன?
27) சக்கஸ் எண்டரிகஸ் என்பது என்ன? உணவு செரித்தலில் அதன் பங்கினை எழுதுக
28) கோலி சிஸ்டோகைனின் பணிகளைக் குறிப்பிடுக.
29) குருட்டுப்புள்ளி என்பது யாது? ஏன் அவ்வாறு அழைக்கப்படுகிறது?
30) லிம்பிக் மண்டலம் ஏன் உணர்ச்சி மூளை எனப்படுகிறது? அதன் பகுதிகளைக் கூறு
31) கார்டேடென்டினே என்பது யாது?
32) கால்நடைகளுக்கு ஏற்படும் நோய்கள் மூன்றினைக் கூறுக.
33) ஸ்டெதஸ்கோப்பின் மருத்துவ முக்கியத்துவத்தை எழுதுக.

## பகுதி - IV

**குறிப்பு: அனைத்து வினாக்களுக்கும் விடையளி.** 5×5=25

34) உயிரினங்களைப் பெயரிடுதலின் அடிப்படை விதிகள் யாவை? **(அல்லது)**
இணைப்புத் திசுவை வகைப்படுத்தி அவற்றின் செயல்களை விவரி.

35) தவளையின் செரிமான மண்டலத்தை படத்துடன் விவரி. **(அல்லது)**
ஸ்டார்ச் மூலக்கூறுகள் சிறுகுடலை அடைவது முதல் ஏற்படும் வேதிமாற்றங்களை விவரி.

36) சுவாசம் நடைபெறும் முறையை விவரி. **(அல்லது)**
எலும்புமுறிவு என்றால் என்ன? எலும்புமுறிவின் வகைகளை எழுதுக.

37) இதயத்துடிப்பு தோன்றல் மற்றும் கட்டுப்படுத்துதல் நடைபெறும் முறையை விவரி. **(அல்லது)**
கண்ணின் ஒளிவிலகல் குறைபாடுகளை பற்றி விவரி.

38) மீன்களின் பொருளாதார முக்கியத்துவத்தை பற்றி எழுதுக. **(அல்லது)**
MRI செயல்படும் விதத்தை விளக்குக.